செய்தி வெளியீடு எண்: 353 நாள் : 16.07.2016

# செய்தி வெளியீடு

பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 148 மாணாக்கர்கள் துருக்கி நாட்டிலுள்ள டிராப்சோன் என்ற இடத்திற்கு சென்றுள்ளனர். இதில் 11 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். துருக்கியில் திடீரென ஏற்பட்ட இராணுவப்புரட்சியின் காரணமாக அங்குள்ள மாணாக்கர்கள் பாதுகாப்பு குறித்து ஊடகங்களில் செய்தி வெளியானதைத் தொடர்ந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டு மாணாக்கர்கள் பாதுகாப்பாக உள்ளனரா என கேட்டறிந்து, அவர்கள் பாதுகாப்புக்குத் தேவையான நடவடிக்கைகளை துருக்கியில் உள்ள இந்திய தூதரகம் மூலம் எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். அதன்படி, துருக்கியிலுள்ள தூதரக அதிகாரிகளை தமிழக அரசின் அதிகாரிகள் தொடர்பு கொண்டனர். டிராப்சோன் பகுதியில் உள்ள இந்திய மாணாக்கர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர் என்றும் விளையாட்டு போட்டிகள் 18.7.2016 அன்று முடிவுறும் என்றும் அதன் பின்னர் இந்தியாவைச் சேர்ந்த மாணாக்கர்கள் அனைவரும் பத்திரமாக இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படுவர் எனவும் துருக்கியிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தமிழக அரசின் அதிகாரிகளிடம் தெரிவித்தனர். எனவே, விளையாட்டுப்போட்டிகளில் பங்கேற்கச் சென்றுள்ள மாணாக்கர்களின் பெற்றோர் எவ்வித அச்சமோ கவலையோ அடைய வேண்டியதில்லை.

*******

செய்தி வெளியீடு – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.

நாள் – 16.7.2016